

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க திருப்பூர் கிழக்கு மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றியம், முத்தூர் பேரூரில் “ஓரணியில் தமிழ்நாடு” கழக உறுப்பினர் சேர்க்கையை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றியச் செயலாளர் கே.சந்திரசேகரன், பேரூர் செயலாளர் செண்பகம் பாலு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் திருச்செங்கோடு நகர தி.மு.க. சார்பில் ஓரணியில் தமிழ்நாடு இயக்க பொதுக்கூட்டம் புதிய பேருந்து நிலையம் ரவுண்டானா அருகில் நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமை தாங்கினார். கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் ஆரணி மாலா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் நகரக் கழகப் பொறுப்பாளர்கள் மேற்கு ஆர்.நடேசன், கிழக்கு தா. கார்த்திகேயன், நகர்மன்றத் தலைவர் நளினி சுரேஷ் பாபு, மாநில நிர்வாகி திருநங்கை அ.ரியா மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ‘பசுமைத் தமிழ்நாடு மிஷன்’ மூலம் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும்

# 16 இலட்சம் அலையாத்தி தாவரங்கள் நட்டு சாதனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 7 - “பசுமைத் தமிழ்நாடு மிஷன் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 16 இலட்சம் அலையாத்தித் தாவரங்களை நட்டு 707 ஹெக்டேர் அலையாத்திப் பரப்பை மீட்டுள்ளோம்” என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**பசுமைத் தமிழ்நாடு மிஷன் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 16 இலட்சம் அலையாத்தித் தாவரங்களை நட்டு 707 ஹெக்டேர் அலையாத்திப் பரப்பை மீட்டுள்ளோம்!**


**திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் 1,350 ஹெக்டேர் அளவுக்குப் புதிய அலையாத்திக் காடுகளை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளது நமது திராவிட மாடல் அரசு.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### தள்ளாத வயதிலும்

# மொழி உணர்வைப் பரப்பிட ஓயாது நடைபயணம் மேற்கொண்டவர்!

## பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் மறைவு குறித்து கி.வீரமணி இரங்கல் !



சென்னை, ஜூலை 7- “தள்ளாத வயதிலும் மொழி உணர்வைப் பரப்பிட ஓயாது நடைபயணம் மேற்கொண்டவர்” என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

பெருங்கவிக்கோ என்ற நாடறிந்த புலவர் பெருமகன் வா.மு.சேதுராமன் (வயது 91) நேற்றிரவு (4.7.2025) மறைவுற்றார் (1935-2025) என்ற தகவல் அறிந்து பெரிதும் வருந்துகிறோம்.

எளிய குடும்பத்தில் பிறந்து, தன்னிகரற்ற தனி முயற்சியால் தமிழ் வித்துவான், முதுகலை, சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பணியில் ஓய்வு பெற்றாலும் தமிழ்ப் பணியில் ஓய்வு பெற்றாரில்லை.

‘தமிழ்ப்பணி’ என்னும் மாத இதழையும் நடத்தி வந்தவர்.அவரது அரும் பணிக்காக தமிழ்நாடு அரசால் ‘கலைமாமணி’, ‘திருவள்ளுவர் விருது’களைப் பெற்றவர். கவிதை, காவியம், நாடகங்கள் என்று எண்ணற்ற நூல்களை எழுதி உள்ளார்.

தள்ளாத வயதிலும் மொழி உணர்வையும், இன வுணர்வையும் பரப்பும் வகையில் ஓயாது நடை பயணம் மேற்கொண்டவர்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல; உலகின் பல நாடுகளையும் சுற்றி தமிழ்த் தொண்டாற்றியவர். சில மாதங்களுக்கு முன்புதான் அவரின் 90ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பெரியார் திடலில் சிறப்புடன் நடத்தப்பெற்று, நாமெல்லாம் கலந்து கொண்டு, வாழ்த்தி மகிழ்ச்சியுற்றோம். சென்னை பெரியார் திடலில் நடக்கும் நமது எல்லா நிகழ்ச்சிகளிலும் முதல் வரிசையில் அமர்ந்து அக மகிழ்ந்தவர். அவருக்கு நான்கு மகன்கள், ஒரு மகள் உண்டு. அனைவரும் உயர் தனிக் கல்வி பெற்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெரும் பணிகளில் சிறப்பாக வாழ்கின்றனர். அவர் மறைவால் பெருந் துயரத்திற்கு ஆளாகியிருக்கும் அவர்களின் அருமைக் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், உலகமே தழுவிய நண்பர்களுக்கும், தமிழ் அன்பர்களுக்கும் திராவிடர் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# சமூக நல்லிணக்கம் நிலைக்க அரும்பாடுபட்டவர்!

## பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் மறைவு குறித்து – எம்.எச்.ஜவாஹிருல்லா இரங்கல்!



சென்னை, ஜூலை 7 - “சமூக நல்லிணக்கத்திற்கு அரும்பாடுபட்டவர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள்” என்று அவரது மறைவு குறித்து மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் மறைவுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம். எச்.ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கை வருமாறு:

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் நிறுவனர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் உடல்நலக்குறைவினால் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகுந்த துயரம் அடைந்தேன்.

சென்னை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். திருவல்லிக்கேணி முஸ்லிம் மேல்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். தனிப்பட்ட முறையில் என்னிடம் நெருங்கிய நட்பு பாராட்டியவர்.

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட கவிதைகளையும் ஏராளமான நூல்களையும் எழுதியவர். தமிழ்நாடு அரசின் திருவள்ளுவர் விருது தினத்தந்தி சி.பா. ஆதித்தனார் விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளைப் பெற்றவர்.

ஈழத் தமிழர்கள் பிரச்சினைக்காகவும் தமிழர்களின் உரிமைகளுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர். முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நேசத்தைப் பெற்றவர்.

சமூக நல்லிணக்கம் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்கு அரும்பாடு பட்டவர்.

அவரது மறைவு ஈடு செய்ய முடியாதது. அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### முதியோர் இல்லங்கள் –

# பணிபுரியும் பெண்கள் விடுதிகளை பதிவு செய்ய எளிய வழிகள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 7- தமிழ்நாட்டிலுள்ள பெண்கள் விடுதிகள் மற்றும் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியவற்றை பதிவு செய்வதற்கான நடைமுறைகள் மறுசீரமைக்கப்பட்டு எளிய ஆளுமையின் கீழ் இந்த செயல்முறையை எளிதாக்குவதற்காக தமிழ்நாடு இ-சேவை இணைய முகப்பில் ஒரு பிரத்யேக சேவை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இ-சேவை இணைய முகப்பின் (https://www.tnesevai.tn.gov.in/) மூலம் பின்வரும் சேவைகள் தற்போது இணைய வழியில் வெளியிடப்பட்டுள்ளன.

முதியோர் இல்லங்களைப் பதிவு செய்தல்.

பெண்களுக்கான இல்லங்கள் பதிவு மற்றும் உரிமம் வழங்குதல்.

பணிபுரியும் மகளிர் விடுதிக்கான உரிமம் வழங்குதல்.

சமூக நலத்துறையின் கீழ் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், தங்களுடைய உரிமங்கள் காலாவதியாகும் போது புதிய இணையதள நடைமுறையைப் பயன்படுத்தி தங்கள் உரிமத்தைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

உரிமம் பெற்ற அனைத்து நிறுவனங்களும் கீழ்க்காணும் நடைமுறையை பின்பற்ற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

https://www.tnesevai.tn.gov.in/ என்ற இணையதளத்தில் தமிழ்நாடு இ-சேவை இணைய முகப்பை பார்வையிட வேண்டும்.

தங்கள் பதிவுகளை புதுப்பிக்க வேண்டும்.

தேவையான அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

உரிமங்கள் மற்றும் பதிவுகள் தேவைப்படும் விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பிக்கும் வசதியினை பயன்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.



திருவாரூர் மாவட்ட தி.மு.க. “ஓரணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பின் தொடக்கமாக கொரடாச்சேரி ஒன்றியம் கமுகக்குடியில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். ஒன்றியச் செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அர்விந்த் மற்றும் டிஜிட்டல் முகவர்கள், பாகநிலை முகவர்கள் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.



தமிழ்நாட்டின் மொழி மண் மானம் உரிமைகளை காக்க ”ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பை துவக்கியிருக்கும் தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க மன்னை கிழக்கு ஒன்றியம் அரிச்சந்திரபுரம் ஊராட்சி கழிமங்கலம் கிராமத்தில், ஒன்றிய செயலாளர் ஐ.வீ.குமரேசன் , தலைமை செயற்குழு உறுப்பினர் த. செல்வம், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.பிரகாஷ், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் க.பாஸ்கர். வாக்குசாவடி டிஜிட்டல் முகவர் செல்வா இளஞ்சூரியன், பி.எல்.ஏ 2. அரு.பழனிவேல் ,சுப்பிரமணியன், கழிமங்கலம் கிளை செயலாளர் தாமரைச்செல்வன் ஆகியோர் வீடுவீடாக சென்று உறுப்பினர் சேர்க்கை மற்றும் பிரச்சாரங்களை மேற்கொண்டனர்.

## தி.மு.க. மாணவர் அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

### கரூர் மாவட்டம்

கரூர் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட செல்வி எஸ்.பிரியங்கா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாகவும் மற்றும் பின்வருபவர்கள் கரூர் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

**ந. அருள்முருகன்,** 152-50, புதுக்குளத்துப்பாளையம், வெங்கமேடு அஞ்சல், கரூர் மாவட்டம் - 639 006.

**செ.ஸ்ரீநாத்,** பள்ளபாளையம் & அஞ்சல், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம் - 639 002.

**செல்வி ச.யசோதா,** 42, புதுப்பாளையம், வைகைநல்லூர் அஞ்சல், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் - 639 120.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ச.ஸ்ரீமதன் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **கா.தீபன்** (123, மேற்கு தெரு, கொளக்காட்டுபுத்தூர் அஞ்சல், பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் - 637201) மற்றும் **பா.கார்த்திக்** (56/1ஏ, கூட்டப்பள்ளி தெரு, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்) ஆகியோர் நாமக்கல் மேற்கு மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

### தஞ்சை வடக்கு மாவட்டம்.

தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட க.செந்தில்குமார் அவர்கள் தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **ஆர்.ஏ.சண்முகநாதன்** (20பி/64, சாமி சன்னதி தெரு, தாராசுரம், கும்பகோணம், தஞ்சை மாவட்டம் - 612 702) அவர்கள் தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட அந்தந்த மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகளுடன் மேற்கண்டவாறு நியமிக்கப்பட்டவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 05-07-2025.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., அவரது சொந்த நிதியிலிருந்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள 890 வாக்குச்சாவடி மையங்களுக்கும் வாக்குச் சாவடி தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகளுக்கு உறுப்பினர் சேர்க்கை எளிமைப்படுத்தும் சீரிய நோக்கில் டேப்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில தகவல் தொழில்நுட்ப துணை செயலாளர் இசை, மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி,பொருளாளர் கதிரவன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், கிருஷ்ணகிரி நகரக் கழக பொறுப்பாளர்கள் அஸ்லாம் வேல்மணி, ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன், சாந்தமூர்த்தி அறிஞர், ராஜேந்திரன், நரசிம்மன், குணவசந்தரசு, எக்கூர் செல்வம், ரஜினி செல்வம், குமரேசன் பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கடப்பன், பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித் தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் விஜய் ராஜசேகர், மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் வாக்கு சாவடி மைய தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் சட்டமன்ற தொகுதி வாக்குசாவடி எண் 217ல் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைபடி அரூர் பேரூர் கழக செயலாளர் முல்லை ரவி தலைமையில் தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க, மாநில சுயாட்சியை மீட்டெடுக்க ”ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது.உடன் கு.தமிழழகன், பேரூர் கழக துணை செயலாளர் செல்வதயாளன், ஐடி விங் தொகுதி ஒருங்கிணைப்பாளர் பிரியங்கா, பேரூர் மகளிர் அணி அமைப்பாளர் மோ.அருள்மொழி, BLA2, BDAகள், ரவி,சுதாகர்,விமல், காஞ்சனா, வினோதினி உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.